தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 6013 010, தமிழ்நாடு, இந்தியா
TAMIL UNIVERSITY, THANJAVUR - 613 010 Tamil Nadu, India.
தொலைபேசி 04362 227151

முனைவர் த. கண்ணன்
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

ந.க.எண். தே3/2020, நாள்: 05.09.2020

சுற்றறிக்கை

பொருள்: மே 2020 தேர்வுக் கால அட்டவணை வெளியிடுதல் - தேர்வு விண்ணப்பம் பெறுதல் – தொடர்பாக.

பார்வை: 1. தமிழக அரசு உயர்கல்வித் துறை அமைச்சர் செய்திக் குறிப்பு நாள் 31.08.2020
2. துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள் 03.09.2020

---------

தமிழக அரசு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பில் "இறுதி பருவத் தேர்வு செப்டம்பர் 15க்குப் பிறகு நடத்தப் படவுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மே 2020இல் நடைபெறவிருந்த தமிழ்ப் பல்கலைக்கழக,

- இளங்கல்வியியல் முதலாமாண்டுத் தேர்வு
- இளங்கல்வியியல் இரண்டாம் ஆண்டுத் தேர்வு
- முதுகலை , முது அறிவயல் நான்காம் பருவத் தேர்வு

எனும் தேர்வுகளுக்கான கால அட்டவணையும் விண்ணப்பங்களும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.Tamiluniversity.ac.in) வெளியிடப்பட்டுள்ளன. தேர்வு விண்ணப்பங்களை மேற்கண்ட இணைய முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது தமிழ்ப் பல்கலைக்கழக வளாகக் கல்வித் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் "தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010 " என்ற முகவரிக்கு அஞ்சல் வழியாகவோ அல்லது மின்படியாக்கம் (Scan) செய்து உருப்பட வடிவில் (Pdf) coetamiluniv@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாகவோ 17.09.2020 அன்று மாலை 5.30 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

தொடர்புடைய துறைத்தலைவர்கள் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை ஒருங்கிணைந்து விண்ணப்பிக்கச் செய்யுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

05/09/2020

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

இணைப்பு:

- மே 2020 – தேர்வுக்களுக்கான கால அட்டவணை
- தேர்வு விண்ணப்பப் படிவங்கள்
- விண்ணப்பக் கட்டண விவரம் மற்றும் தேர்வு விண்ணப்பம் குறித்த நெறிமுறைகள்

குறிப்பு: தேர்வு விண்ணப்பங்களைத் தரவிறக்கம் செய்வதற்கு www.Tamiluniversity.ac.in

பெறுநர் :தொடர்புடைய துறைத்தலைவர்கள்

நகல் : 1. துணைவேந்தர் செயலகம் 2. பதிவாளர் செயலகம்